**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF ADDITIONAL MAHILA, PERAMBALUR.**

| | |
|---|---|
| Calendar Case No: | CC. 78/2025 |
| DEPOSITION OF WITNESS for Prosecution | அ.சா.3 |
| Name : | கொளஞ்சி |
| Father's Name/Husband Name: | ராமசாமி |
| Village : | சு.ஆடுதுறை |
| Taluk : | குன்னம் |
| Age : | 36/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day 12.05.2026

**(1969-ம் ஆண்டின் 54வது விதியில் 9-வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. S. தினேஷ், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.**

**( எதிரிகள் 1 மற்றும் 2 ஆஜர் இல்லை. அவர்களுக்காக கு.வி.மு.ச.317 ன்படி மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**முதல் விசாரணை**

நான் மேற்கண்ட முகவரியில் வசித்து வருகிறேன். எலக்டீரிசனாக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 என்னுடைய நண்பர். கடந்த 13.03.2023ம் தேதி காலை 10.30 மணியளவில் நானும் அ.சா.2 ம் இருசக்கர வாகனத்திலும், அ.சா.1 அவருடைய இருசக்கர வாகனத்திலும் தொழுதூரில் வேலை செய்வதற்காக திருமாந்துறை மாரியம்மன் கோவில் அருகே போய் கொண்டு இருந்தோம். அப்போது இரண்டு எதிரிகளும் எனக்கு எதிரே இரு சக்கர வாகனத்தில் வந்தார்கள், வரும்போதே அ.சா.1 ஐ திட்டிக் கொண்டே வந்தார்கள்.

விவாகரத்து வழக்கில் கையெழுத்து போட மாட்டாயா என்று சொல்லி கௌரி அ.சா.1 ஐ திட்டிக் கொண்டு, செருப்பால் அடிக்க வந்தார். அ.சா.1 எதிரி கௌரியின் கையை பிடித்துக் கொண்டார். கௌரியின் மகன் அ.சா.1 ஐ பின்னால் வந்து பிடித்துக் கொண்டார். கௌரி செருப்பால் அ.சா.1 ஐ நெஞ்சில் அடித்துவிட்டார். சண்டையை

தடுக்க சென்ற என்னையும் அ.சா.2 யையும் வரக்கூடாது என்று சொன்னார்கள். சண்டையை தடுக்க வந்தால் என்மீதும், அ.சா.2 மீதும் வழக்கு போடுவதாக மிரட்டினார்கள். எதிரிகள் எங்கள் மீது கேஸ் கொடுத்தால் தான் வழிக்கு வருவீர்கள் என்று சொல்லி விட்டு கிளம்பிவிட்டார்கள். அதன்பிறகு செம்மலை காயம் பட்ட ராஜவை பெரம்பலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் செல்வதாக சொன்னார். நான் அங்கு இருந்து சென்று விட்டேன். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். இன்று இந்நீதிமன்றத்தில் எதிரிகள் ஆஜர் இல்லை. போலிசார் என்னை விசாரித்தனர்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

நான் முதன்மை வாக்குமூலத்தில் கூறிய சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் கூறியுள்ளேன் என்றால் சரிதான். போலிசார் வழக்கு சம்மந்தமாக எப்போது என்னை விசாரணை செய்தார்கள் என்றால் 4 நாட்கள் கழித்து 17.03.2023ம் தேதி எனது வீட்டில் வைத்து என்னை விசாரித்தார்கள். இரண்டாம் எதிரி கௌரி செருப்பால் முதல் முறை அடித்தது அ.சா.1ன் மீது படவில்லை. 1ம் எதிரி அ.சா.1 ஐ பிடித்துக் கொண்டதால் 2ம் எதிரி கௌரி அ.சா.1 ஐ மறுபடியும் செருப்பால் அடித்துவிட்டார். 2ம் எதிரி எந்த கையால் அ.சா.1 ஐ செருப்பால் அடித்தார் என்றால் வலது கையால் அடித்தார். நான் சொல்வது போல் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், என் மீதும எனது நண்பர்களின் மீதும் 2ம் எதிரி கொடுத்த புகாரிலிருந்து அ.சா.1 கொடுத்த பொய் புகாருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Typed to my dictation in open court in the presence of Witness and read over to the witness and admitted by the witness to be correct.

Sd/-xxxxxxx
Judicial Magistrate,
Additional Mahila Court,
Perambalur.